4 விதி 110-இன் கீழ் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் அறிக்கை.

21-4-1990 ஆம் நாளன்று அவையில் துணை வினாவிற்கு அளித்த விடைக்கு விளக்கமும், அது குறித்து ''இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில்'' வெளிவந்துள்ள செய்திக்கு மறுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 110 ஆவது விதியின் கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் ஓர் அறிக்கையினைப் படைப்பார்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் 1, சனிக் கிழமை அன்று மாண்புமிகு உறுப்பினர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் கேட்ட கேள்வி பற்றியும், அதற்கு நான் அளித்த பதில் குறித்தும் 22-4-1990 இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தித் தாளில் 3 ஆம் பக்கத்தில் ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தி குறித்து இவ்விளக்கத்தினை அளிக்க விரும்புகிறேன்.

பொது மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைக்காகப் பயன்படும் வால்வுகள் சரியாகக் கிடைப்பதில்லையே இதை அரசு அறியுமா? இதற்குரிய நடவடிக்கை எடுக்குமா என்பதே மூலக் கேள்வி. இதற்கு ஆம். அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்று பதில் சொல்லப்பட்டது. அப்பத்திரிக்கையில் குறிப்பிட்டு உள்ளதைப்போல் இதில் என்ன Bureaucratic தன்மை இருக்கிறது என்பது புரியவில்லை. மேலும் துணைக் கேள்வி அனுமதிக்கப் பட்டபொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் கிடைக்க வில்லை? அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? போன்ற தொடர்புடைய கேள்விகளைக் கேட்பார்கள் என எதிர் பார்த்தேன். ஆனால் அவர்கள் மூலக் கேள்விக்குத் தொடர் பில்லாமல் ஸ்டார் எட்வர்ட் வால்வின் விலை ரூபாய் 9,020, சோரின் வால்வின் விலை ரூபாய் 12,000, ஒரு வால்விற்கு ரூபாய் 3,000 அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு 50 வாங்கினால் 1,50,000 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னதற்குப் பதிலாகத்தான் நான் ' மாதம் 50 வாங்குவதில்லை '— சென்ற 1989-90 நிதியாண்டில் மொத்தமே '10' தான் வாங்கப்பட்டுள்ளது என்ற தகவலையும், இவைகள் அனைத்தையும் வாங்கும் பொறுப்பை Central Purchase Committee தான் நிர்ணயிக்கிறது என்றும் பதிலளித்தேன். மேலும் உறுப்பினர் அவர்கள் மருத்துவர் என்ற முறையில் தெரிவித்துள்ள கருத்துக்களையும் அரசு கருத்தில் எடுக்கும் என்றும் குறிப்பிட்டேன். இந்த பதிலைத்தான் இண்டியன் எக்ஸ்பிரஸ் நேரடியாகப் பதில் சொல்லவில்லை எனக் குறிப்பிட்டுள்ளது. அப்பொழுது எனக்குத் தெரிந்த தகவல்களைக்கொண்டு அந்தப் பதிலைத்தான் சொல்ல முடியும்.

மேலும் அதில் நான் மாண்புமிகு உறுப்பினரிடம் ஆளும் கட்சி உறுப்பினராக இருந்துகொண்டு இவ்வாறு கேள்விகளைக் கேட்கலாமா எனக் கேட்டதாக அப்பத்திரிக்கையில் செய்தி வெளியிட்டுள்ளார்கள். இங்கே மைக் இல்லாமல் பின்பக்கம் அவ்வுறுப்பினரிடம் பேசியது பத்திரிகையாளருக்கு அவ்வளவு தெளிவாக எப்படிக் கேட்டது என எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல்கள் அனைத்தும் முழுக்க முழுக்க தவறானவைகள் ஆகும்.

வால்வுகளில் இரண்டுவித வால்வுகள் இருதய அறுவை சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்று Ball and case type-ம் மற்றொன்று Disc type-ம் ஆகும். பொது மருத்துவமனை இருதய அறுவைச் சிகிச்சைத் துறையிலிருந்து இந்த ஆண்டிற்கு 70 Ball and case type வால்வும், 80 Disc type வால்வும் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். 12-6-1989-இல் Central Purchase Committee இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் அமிர்தபசார் போன்ற பத்திரிகைகளின் மூலமாக அகில இந்திய அளவில் வால்வுகளுக்கு டெண்டர் கோரி விளம்பரம் செய்தது. 19-7-1989-இல் டெண்டர்களின் மீது முடிவு எடுக்கப்பட்டது. பால் கேஸ் வால்விற்காக இரண்டு கம்பெனிகள் டெண்டரில் கலந்து கொண்டன. அவைகளில் Med Tech கம்பெனி வால்வு ஒன்றின் விலை ரூபாய் 6,500 என்றும், மாண்புமிகு உறுப்பினரால் கூறப்பட்ட ஸ்டார் எட்வார்ட் வால்வு கம்பெனி ரூபாய் 8,528 என்றும் குறிப்பிட்டிருந்தன. மாண்புமிகு உறுப்பினர் தனது கேள்வியில் அவர்கள் ஸ்டார் எட்வார்ட் கம்பெனி வால்வின் விலை ரூபாய் 9,020 எனச் சொன்னது கூட தவறாகும். உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் குறைந்த விலையைக் குறித்துள்ள கம்பெனிக்குத்தான் கொடுக்க வேண்டும் என்றால் அதை அவர்கள் கூறிய Star Edward-க்குக் கொடுக்காமல் Med Tech-ற்குத் தான் கொடுத்திருக்க வேண்டும். ஏனென்றால், வால்விக்குச் சுமார் 2,000 குறைகிறது. ஆனால் உறுப்பினர் அவர்களே சுட்டிக் காட்டியதைப் போல Star Edward வால்வே நீண்ட காலமாக உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாலும் Med Tech கம்பெனி வால்வில் உள்ள ரிங் பகுதிகள் சரியாக இல்லை என்பதாலும் அத்துறை வல்லுநர்கள் ஸ்டார் எட்வார்ட் வால்வே வாங்குவதென்று பரிந்துரைத்ததாலும் Central Purchase Committee-யும் Star Edward வால்வே வாங்கலாம் என முடிவெடுத்தது. அதேபோல Disc வால்விற்கான டெண்டர்களில், கிருஷ்ணா கேசவ் லிமிடெட் என்ற கம்பெனி,—அதுதான் சோரின்வால்வ் என்று உறுப்பினரால் குறிப்பிடப்பட்டது—வால்வ் ஒன்று ரூபாய் 10,575 என்றும், South India Surgical Company 1,120 U.S. டாலர் என்றும் குறிப்பிட்டிருந்தன. இதில் சோரின் வால்வின் விலை குறைவாக இருப்பதாலும்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக்கூட 12,000 என்று தவறாகச் சுட்டிக் காட்டினார்கள். அதனுடைய விலை 10,575 ரூபாய்தான். அதுவும்

கடந்த 15 ஆண்டுகளாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதாலும், அக்கம்பெனியின் டெண்டரையும், Central Purchase committee ஏற்றுக்கொண்டது. ஆகவே, Ball Case Type-ற்கு Star Edward-ம் Disc type வால்விற்கு Sorin Valve-மே முடிவு செய்யப்பட்டன.

10-25 மணி

இதற்குப் பிறகு ஸ்டார் எட்வார்ட் கம்பெனி 17-10-1989 இல் 15 வால்வுகள் வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. 8-11-1989-இல் எங்களிடம் நிறைய வால்வுகள் இருக்கின்றன, ஆனால் பழைய பாக்கி ரூபாய் 1,22,512-ஐ அனுப்பி வைக்கும் படியும் அந்த Star Edward Company மருத்துவத் துறைக்குப் பதில் அனுப்பியிருந்தது. பாக்கி பணமும் திருப்பிக் கட்டப்பட்டது. ஆனால் வால்வுகள் வரவில்லை. மேலும் 22-11-1989-லும் 22-12-1989-லும் 7-3-1990 லும் திரும்ப திரும்ப வால்வுகளை அனுப்பி வைக்குமாறு அந்த கம்பெனிக்கு கடிதம் எழுதப்பட்டது. ஆனால் இதுநாள் வரையில் அந்த கம்பெனியிலிருந்து பதிலும் வரவில்லை. வால்வுகளும் வரவில்லை. இந்த நிலையில் 10 சோரின் வால்வுகள் வாங்கப்பட்டு இருக்கிறது. ஸ்டார் எட்வர்ட்ஸ் வால்வ் 10 ஆண்டுகள் கியாரண்டி கொடுத்திருப்பதாகவும், சோரின் வால்விற்கு கியாரண்டியே கொடுக்கப்படவில்லை என்றும் கூறுவது முற்றிலும் தவறான செய்தியாகும். இதுவும் இந்தியன் எக்ஸ்பிரசில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இரண்டுமே ஒரு ஆண்டு கியாரண்டி தான் கொடுத்திருக்கின்றன. ஆகவே, இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(அ) பள்ளிப்பட்டு வட்டத்தில் சில இராமங்களில் சூறவாளி கல் மழையால் பயிர்கள் சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் பாதிப்பு

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : தலைவர் அவர்களே, ''பள்ளிப்பட்டு வட்டத்திற்குட்பட்ட சில கிராமங்களில் கடுமையான சூறாவளிக் காற்றாலும், கல் மழையாலும் சுமார் 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நெல், கரும்பு போன்ற பயிர்கள் சேதமடைந்துள்ளதால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :